**IN THE COURT OF THE III ADDITIONAL DISTRICT AND SESSIONS JUDGE, SALEM.**

**S.C.No.138/2013**

Date: 26.02.2024.

PW–1: ராஜலிங்கம்

சாட்சி இன்று மீண்டும் மனுவின் பேரில் திரும்ப அழைக்கப்பட்டு எதிரிகள் 1, 2, 5, 7, 9, 11, 14 முதல் 18 குறுக்கு விசாரணை செய்யப்பட்டார்.

**A1 to A3, A5, A6, A9, A11, A13, A14 & A16 to A18 present. A7, A8 & 15 called absent. Petition u.sec.317 Cr.P.C filed and allowed.**

**1, 2, 5, 7, 9, 11, 14 முதல் 18 எதிரிகள் தரப்பில் குறுக்கு விசாரணை**

சம்பவ சமயத்தில் நான் ஆராய்ச்சி படிப்பு படித்துக்கொண்டிருந்தேன். உயிர்வேதியியல் பிரிவில் தொண்டை புற்றுநோய் குறித்து ஆராய்ச்சி படிப்பு படித்துக்கொண்டிருந்தேன். என்னுடன் எத்தனை பேர் படித்துக்கொண்டிருந்தார்கள் என்றால் நான் ஆராய்ச்சி படிப்பை டாக்டர் மனோகரன் என்பவரது வழிகாட்டுதலின்படி படித்துக்கொண்டிருந்தேன். நான் மட்டும் தான் படித்துக்கொண்டிருந்தேன். என்னுடன் சேர்ந்து வேறு யாரும் படிக்கவில்லை.

எனது வீட்டிற்கும், நான் படித்துக்கொண்டிருந்த அண்ணாமலை பல்கலைகழகத்திற்கும் இடையே சுமார் 40 கி.மீ தொலைவு. எனது வீட்டிலிருந்து மேற்படி பல்கலைகழகத்திற்கு போவதற்கு பேருந்தில் செல்வதாக இருந்தால் சுமார் 2–1/2 மணிநேரம் ஆகும் ஏனென்றால் எனது ஊரிலிருந்து பல்கலைகழகத்திற்கு நேரடியான பேருந்து வசதி கிடையாது. 2, 3 பேருந்துகள் மாறிதான் செல்லவேண்டும்.

நான் படித்துக்கொண்டிருந்த சமயத்தில் எங்களது வீட்டில் இருசக்கரமோட்டார் வாகனம் இருந்ததா என்றால் ஒரு வாகனம் இருந்தது. அந்த வாகனத்தின் பதிவு எண் சொல்லமுடியுமா என்றால் நினைவில்லை. அந்த வாகனம் எந்த வருடம் வாங்கப்பட்டது என்றும் நினைவில்லை. அந்த வாகனத்தை எத்தனை ஆண்டுகள் வைத்திருந்தோம் என்றால் அந்த வாகனம் பழைய வாகனம் அதனை இறந்துபோன எனது மூத்த சகோதரர் தர்மலிங்கம் தான் வைத்திருந்தார். எத்தனை ஆண்டுகள் வைத்திருந்தார் என்று நினைவில்லை.

அந்த வாகனத்தின் மூலம் நான் எத்தனை நாட்கள் பல்கலைகழகத்திற்கு போய்யிருப்பேன் என்றால் ஒருநாளும் சென்றதில்லை. வழக்கு சம்பவம் குறித்து எனது நண்பர்கள் யாருக்காவது தகவல் கொடுத்து அவர்கள் துக்கம் விசாரிப்பதற்கு வந்தார்களா என்றால் நான் அப்போதிலிருந்த மனநிலையில் யாருக்கும் தகவல் சொல்லவில்லை. நான் சிதம்பரத்தில் எந்த பகுதியில் அறை எடுத்து தங்கியிருந்தேன் என்றால் நான் சிதம்பரத்தில் தங்கவில்லை. எனது வீட்டிலிருந்து தான் சென்று படித்து வந்தேன்.

வழக்கமாக நான் பல்கலைகழகத்திற்கு காலை 7.00 மணிக்கு எனது வீட்டிலிருந்து புறப்பட்டு செல்வேன். காலை 10.00 முதல் 10.30 மணிக்குள்ளாக பல்கலைகழகத்தை சென்றடைவேன். சம்பவத்திற்கு முதல் நாள் நான் பல்கலைகழகத்திற்கு போயிருந்தேன். சம்பவ தினத்தன்று நான் காலை எத்தனை மணிக்கு பல்கலைகழகத்திற்கு போவதற்காக எனது வீட்டிலிருந்து புறப்பட்டேன் என்றால் அன்றைய தினம் நான் பல்கலைகழகத்திற்கு போகவில்லை. வாரத்திற்கு ஒரு நாள் அல்லது இரண்டு நாட்கள் தான் நான் பல்கலைகழகத்திற்கு போவேன் என்று சாட்சி சுயமாக கூறுகிறார்.

என் தகப்பனார் காசிநாதன் மீது கள்ளசாராயம் காய்சியது தொடர்பாக பல்வேறு குற்றவழக்குகள் பதிவு செய்யப்பட்டது என்றால் சரியல்ல. எதிரிகள் மீதுதான் கள்ளசாராய வழக்குள் பதிவு செய்யப்பட்டது என்றும், இது வழக்கிற்கு தேவையில்லாத கேள்வி என்றும், தேவையான கேள்விகளை மட்டுமே எதிரி தரப்பு வழக்கறிஞர் கேட்கும்படி அவருக்கு அறிவுறுத்தவேண்டுமென்றும் சாட்சி பதில் அளிக்கிறார்.

எனது தகப்பனார், சகோதரர்கள் ஆகியோர் சாராயம் காய்ச்சி விற்பதை தொழிலாக செய்து வந்தார்கள் என்றாலும், அதற்கு ஊர் மக்கள் எதிர்ப்பு தெரிவித்து வந்தார்கள் என்றாலும் சரியல்ல. அது அப்பட்டமான பொய். எதிரிகள் சாராயம் காய்ச்சி விற்றதாக நான் அப்பட்டமாக பொய் சொல்லுகிறேன் என்றால் சரியல்ல. அவர்கள் சாராயம் காய்ச்சி விற்றது உண்மை. எனது சகோதரர் அமிர்தலிங்கத்தின் அலைபேசி எண் தெரியுமா என்றால் நான் கடந்த 5 ஆண்டுகளாக சிறையில் இருந்து வருவதால் நினைவில்லை.

என் சகோதரர் மகாலிங்கத்தின் அலைபேசி எண் தெரியுமா என்றால் அதுவும் தற்போது நினைவில்லை. எனது அலைபேசி எண் எனக்கு நினைவு இருக்கிறது. அந்த எண்.9787661820. அந்த சிம்கார்டை இறந்துபோன எனது தம்பி மகாலிங்கம் தான் வாங்கி கொடுத்தார். சம்பவத்தன்று மேற்படி அலைபேசி எண்ணுக்கு சம்பவம் தொடர்பாக அழைப்பு வந்ததா என்றால் நான் அன்றைய தினம் செல்போன் உபயோகம் செய்யவில்லை.

சம்பவ தினத்தன்று மேற்படி செல்போன் வீட்டில் எனது அம்மாவின் கட்டுப்பாட்டில் தான் இருந்தது. மற்றொரு செல்போன் என் தம்பி மகாலிங்கத்திடம் இருந்தது. சம்பவ தினத்தன்று நாங்கள் குளித்துவிட்டு வந்துகொண்டிருந்தபோது மகாலிங்கத்தின் அலைபேசி யாரிடம் இருந்தது என்றால் மகாலிங்கத்திடம் தான் இருந்தது. மகாலிங்கத்தின் செல்போன் சம்பவத்தின்போது எந்த இடத்தில் விழுந்து உடைந்தது என்றால் அந்த செல்போனின் குறித்து இப்போது வரை எந்த தகவலும் எனக்கு தெரியவில்லை. சம்பவத்தின் போது மகாலிங்கம் தப்பித்து ஓடும்போது எங்கேயோ விழுந்து உடைந்திருக்கிறது என்று சொன்ன சாட்சி பின்னிட்டு மாற்றி அந்த செல்போன் குறித்து எனக்கு தெரியவில்லை என்று சொல்லுகிறார்.

எதிரிகள் துரத்தியபோது மகாலிங்கம் எங்கிருந்து ஓட ஆரம்பித்தார் என்றால் முச்சந்து புளியமரத்திலிருந்து மேற்கு நோக்கி ஓட ஆரம்பித்தார். அந்த புளியமரத்திலிருந்து 20 மீட்டர் துரத்திற்குள்ளாக எதிரி பாஸ்கரன் வீடு இருக்கிறது. 30 மீ. தொலைவில் தபால் அலுவலகம் இருக்கிறது. 15 மீ தொலைவில் பாலுசாமிவீடு இருக்கிறது.

எதிரி பாஸ்கரன் வீட்டிலிருந்து மேற்படி புளியமரமானது கிழக்கு திசையில் இருக்கிறது. மேற்படி புளியமரத்திலிருந்து மகாலிங்கம் வெட்டப்பட்ட இடம்வரை அவர் ஓடினார். மேற்படி புளியமரத்திலிருந்து மகாலிங்கம் வெட்டப்பட்ட இடமானது சுமார் 55 முதல் 60 மீட்டர் தொலைவு. மகாலிங்கம் வெட்டப்பட்ட இடத்திற்கு அருகில் காமராஜ், வேலாயுதம், தேவகுமாரி, இளவரசன், எதிரி திருஞானம், எதிரி காளிதாசன் ஆகியோர்களது வீடுகள் இருக்கிறது.

மகாலிங்கம் வெட்டப்பட்ட இடத்திற்கு எதிர்புறம் தேவகுமாரியின் டீ கடை இருக்கிறது. அந்த டீ கடைக்கும், மகாலிங்கம் வெட்டப்பட்ட இடத்திற்கும் இடையே 10 முதல் 15 மீட்டர் தொலைவு இருக்கும். மகாலிங்கம் அணிந்திருந்த செருப்புகள் எந்த இடத்தில் விழுந்தது என்று நான் கவனிக்கவில்லை. எனது செருப்புகள் எந்த இடத்தில் விழுந்தது என்று எனக்கு தெரியவில்லை.

முச்சந்தி புளியமரத்திற்கு அருகில் இருந்து தான் சுரேஷ் மற்றும் பிரபு ஆகியோரும் ஓட ஆரம்பித்தார்கள். சுரேசை எதிரிகள் ரவிசந்திரனும், திருஞானமும் துரத்தினார்கள். பிரபுவை எதிரிகள் பிரபாகரனும், பழனிசாமியும் வழிமறித்து வெட்டினார்கள். மகாலிங்கத்தை எதிரிகள் தினேசும், ராஜதுரையும் துரத்தினார்கள். பிரபு முச்சந்தியிலிருந்து தெற்கு நோக்கி ஓட ஆரம்பித்தார். சுரேஷ் முச்சந்தியிலிருந்து மேற்கு நோக்கி ஓடினார். என்னை யாரும் துரத்தவில்லை என்றால் சரியல்ல. என்னையும் துரத்தினார்கள்.

நான் முச்சந்தியிலிருந்து கிழக்கிலிருந்து மேற்கு நோக்கி ஓடினேன். நான் யாருடைய வீட்டிற்குள் ஓடி ஒளிந்தேன் என்றால் நான் யாருடைய வீட்டிலும் ஒளியவில்லை. நான் மேற்காக ஓடிசென்று எதிரி ரவிசந்திரன் வீட்டின் வழியாக எனது வீட்டை நோக்கி ஓடினேன். அப்படி ஓடும்போது அண்ணா வெட்டவராங்க தப்பிச்சு ஓடிருங்க என்று சொல்லிகொண்டே ஓடினேன். வீட்டிலிருந்த எனது அண்ணன்கள் தப்பித்து சென்றுவிடவேண்டும் என்பதற்காக அவ்வாறு சத்தம்போட்டுகொண்டே ஓடினேன் என்றால் சரிதான்.

வீட்டில் எனது அண்ணன் தர்மலிங்கம் இருந்தார். எனக்கு ஒரு அண்ணன் தான். எனது அண்ணன் தர்மலிங்கம் வீட்டிலிருந்து எந்த திசையை நோக்கி ஓடினார் என்றால் அவர் என்னை காப்பாற்றுவதற்காக என்னை நோக்கிதான் ஓடிவந்தார். எனது பெற்றோர்கள் மற்றும் தர்மலிங்கம் ஆகியோர் என்னை காப்பாற்றுவதற்காக எனக்கு முன்னர் வந்து நின்றுகொண்டார்களா என்றால் அவர்கள் என்னை நோக்கி ஓடிவந்தார்கள். நானும் அவர்களை நோக்கி ஓடினேன். அவர்கள் மூவரும் வீட்டிலிருந்து தான் ஓடிவந்தார்கள்.

அவர்கள் என்னை நோக்கி ஓடிவந்தபோது நான் எனது வீட்டை கடந்து ஓடிவிட்டேன் என்றால் சரியல்ல. எனது தம்பி மகாலிங்கம் எனக்கு முன்னர் ஓடிகொண்டிருந்தார் என்றும், அவரை எதிரிகள் வழிமறித்து வெட்டினார்கள் என்றும், எதிரிகள் சிலம்பரசனும், திருவாளப்புத்துார் ரமேசும் என்னை துரத்திக்கொண்டு ஓடிவந்தர்கள் என்றும், என்னை காப்பாற்றுவதற்காக என் தகப்பனார் அவர்கள் இருவரையும் தடுத்தார் என்றும், அப்போது எதிரிகள் சிலம்பரசனும், திருவாளப்புத்துார் ரமேசும் எனது அப்பாவை வெட்டிவிட்டார்கள் என்றும், எனது அப்பாவை வெட்டியதை பார்த்த என் தாயார் என் அப்பாவை காப்பாற்றுவதற்காக தடுப்பதற்கு சென்றார் என்றும், அப்போது எனது பெற்றோரை காப்பாற்றுவதற்காக அண்ணன் தர்மலிங்கம் வந்தார் என்றும், அவரை எதிரிகள் சக்திவேல் மகன் ரமேசும், பாஸ்கரும் வெட்டிவிட்டார்கள் என்றும், எதிரிகள் ஸ்ரீதர், ஜவகர்பாபு, விஜய், சுரேஷ், காளிதாசன் ஆகியோர் சுற்றி வளைத்து கொண்டார்கள் என்றும், நான் தப்பித்து கொள்வதற்காக சற்று துரமாக நின்றுகொண்டேன் என்றும் சாட்சி சுயமாக கூறுகிறார்.

என் பெற்றோர்களை எதிரிகள் வெட்டியபோது நான் அந்த இடத்திலிருந்து தப்பித்து ஓடவில்லை என்றால் சற்று துரமாக நின்று அதனை பார்த்தேன். சுமார் 20 முதல் 25 மீட்டர் தூரத்தில் நின்றுகொண்டிருந்தேன். அப்போது அமிர்தலிங்கம் எங்கு சென்றார் என்றால் அவர் எனக்கு பின்னால் ஓடிவந்தார். சம்பவமானது சுமார் 5 நிமிடத்தில் முடிந்திருக்குமா என்றால் 15 முதல் 25 நிமிடங்கள் நடந்தது. நான் சம்பவ இடத்தில் எவ்வளவு நேரம் நின்றுகொண்டிருந்தேன் என்றால் அதிகபட்சம் 2 முதல் 3 நிமிடங்கள் நின்றிருப்பேன்.

அந்த சமயத்தில் எதிரிகள் யாராவது என்னை வெட்டுவதற்கு வந்தார்களா என்றால் எதிரிகள் அனைவருமே என்னை வெட்டுவதற்கு முயற்சித்தார்கள் எனவே நான் அங்கிருந்து தப்பி ஓடிவிட்டேன். அந்த இடத்திலிருந்து தப்பித்து நான் எவ்வளவு துாரம் ஓடினேன் என்றால் எதிரி சக்திவேல் ரமேஷ் என் அண்ணன் தர்மலிங்கத்தின் தலையை எடுத்து சென்று காளியம்மன் கோவில் சூலத்தில் குத்தினார் என்றும், எதிரி பழனிசாமி பிரபுவின் தலையை உதைத்து சென்று தேசிங்குபாலன் இறந்து இடத்தில் வைத்தார் என்றும், நான் எனது வயல் வழியாக புகுந்து மீன்சுருட்டி காவல்நிலையத்தை

நோக்கி ஓடினேன் என்றும் சாட்சி கூறுகிறார். என் பெற்றோர் வெட்டப்பட்ட இடத்திலிருந்து சுமார் 40 முதல் 50 மீட்டர் தொலைவில் காளியம்மன் கோவில் இருக்கிறது. நான் சம்பவ இடத்தின் அருகில் நின்றுகொண்டிருந்தாக சொல்லும் இடத்திற்கும், காளியம்மன் கோவிலுக்கும் இடையே சுமார் 15 மீட்டர் தொலைவு இருக்கும்.

எதிரிகள் எனது வீட்டையும், என்னையும் கடந்து தான் தலைகளுடன் காளியம்மன் கோவிலை நோக்கி சென்றார்கள் என்றால் நான் சற்று தள்ளி நின்றுகொண்டிருந்தேன் அங்கிருந்து தான் ஓடிவிட்டேன். எதிரிகள் என்னை கடந்து காளியம்மன் கோவிலை நோக்கி சென்றபோது எனக்கும் அவர்களுக்கும் இடையே எவ்வளவு தொலைவு இடைவெளி இருந்தது என்றால் என்னையும் எதிரிகள் துரத்தி கொண்டு வந்தார்கள் என்றும் நான் அங்கிருந்து ஓடிவிட்டேன் என்றும் சாட்சி பதில் சொல்லுகிறார். எனவே எதிரிகள் என்னை கடந்து காளியம்மன் கோவிலுக்கு போகவில்லை என்றால் எதிரிகள் காளியம்மன் கோவிலை நோக்கி சென்றபோது நான் வேறு திசையில் ஓடிவிட்டதால் அவர்கள் என்னை கடப்பதற்கு சாத்தியமில்லை.

சுரேஷ், பிரபு, மகாலிங்கம் ஆகியோரது செல்போன் மற்றும் செருப்புகள் ஆகியவை எந்த இடங்களில் விழுந்து கிடந்தது என்று இப்போது வரை எனக்கு தெரியாது. சம்பவத்தின் போது நான் எனது பெற்றோர் மற்றும் சகோதரர்களை காப்பாற்றுவதற்கு எந்த நடவடிக்கையும் எடுக்கவில்லை என்றால் எதிரிகள் கொடுரமான ஆயுதங்களுடன் இருந்தார் என்பதால் நான் பயந்து கொண்டு அவர்கள் பக்கத்தில் போகவில்லை.

எதிரிகள் எந்த திசையை நோக்கி தப்பித்து ஓடினார்கள் என்றால் அதனை நான் பார்க்கவில்லை. எனது தாயாரை நான் தொட்டு துாக்கவில்லை என்றால் நான் காவல்நிலையத்திற்கு போய்விட்டேன். என் தாயார் தாக்கப்பட்ட சமயத்தில் அவர் என்னை பார்த்து காப்பாற்றசொல்லி சத்தம் போட்டாரா என்றால் நான் தொடர்ச்சியாக ஓடிவிட்டேன். காவல்நிலையத்திற்கு சென்றுவிட்டேன். நான் எந்த இருசக்கர வாகனத்தில் காவல்நிலையத்திற்கு சென்றேன் என்றால் நடந்துதான் சென்றேன். என்னுடன் என் தம்பி அமிர்தலிங்கம் வந்தாரா என்றால் இல்லை. அவர் வேறு

பக்கமாக தப்பித்து சென்றுவிட்டார். வழக்கு சம்பவ தினத்திற்கு எத்தனை நாட்களுக்கு முன்பாக எனது வீடு சூறையாடப்பட்டது என்றால் தேசிங்குபாலன் கொலை வழக்கிற்கு பின்னிட்டு தான் சூறையாடப்பட்டது. குறிப்பாக எந்த தினத்தன்று சூறையாடப்பட்டது என்றால் நான் அந்த சமயத்தில் சிறையில் இருந்ததால் குறிப்பாக தேதி தெரியவில்லை. சிறையிலிருந்து வெளியே வந்ததிற்கு பிறகு தான் சூறையாடப்பட்டது பற்றி தெரிந்துகொண்டேன்.

எதிரிகளுடைய வீட்டை நான் எப்போது சூறையாடினேன் என்றால் அப்படி ஒரு சம்பவமே நடைபெறவில்லை. அது சம்மந்தமாக உயர்நீதிமன்றத்தில் ஒரு வழக்கு தாக்கல் செய்யப்பட்டது என்று சாட்சி சுயமாக கூறுகிறார். அந்த வழக்கினை தேசிங்குபாலனின் அக்கா மகன் ரமேஷ், த/பெ.காசிநாதன் என்பவர் தான் தாக்கல் செய்தார். அந்த வழக்கில் நான் என்னை ஒரு தரப்பினராக சேர்த்துகொண்டு அதில் என் தரப்பு நியாங்களை சொன்னேன்.

சாட்சி சில ஆவணங்களை தன் தரப்பிலிருந்து எடுத்து நீதிமன்றத்திற்கு காட்டுகிறார். அந்த ஆவணங்கள் என் தரப்பில் மாவட்ட ஆட்சியருக்கும், உள்துறை செயலருக்கும் அனுப்பப்பட்டவை ஆகும். மேலும் என் தாயாரால் அனுப்பட்ட மனுவிற்கு மாவட்ட ஆட்சியர் பதில் அனுப்பிய ஆவணமாகும். எனது வீடு சூறையாடப்பட்டது சம்மந்தமாக நான் காவல்நிலையத்தில் புகார் கொடுத்தேனா என்றால் காவல்நிலையத்திலும் மற்றும் போலிஸ் உயர்அதிகாரிகளிடமும் புகார் கொடுத்திருக்கிறேன்.

அந்த சம்பவம் தொடர்பாக அரசாங்கத்தால் எங்களது கிராமத்தில் எதிரிகளின் உறவினர்களுக்கு 15 வீடுகள் கட்டிகொடுக்கப்பட்டுள்ளது. எனது தாயாரை யார் மருத்துவமனைக்கு அழைத்து சென்றது என்று எனக்கு நேரடியாக தெரியாது என்றால் சரியல்ல. என் அம்மாவின் சகோதரி சரோஜாவும் தம்பி சேகரும் மருத்துவமனைக்கு அழைத்து சென்றார்கள். சரோஜாவும், சேகரும் சம்பவத்தை நேரில் பார்த்தார்களா என்று எனக்கு தெரியாது. வேறு யாரும் மருத்துவமனைக்கு உடன் சென்றார்களா என்று நான் பார்க்கவில்லை. போலிசார் நிறையபேர் இருந்தார்கள்.

போலிசார் இந்த வழக்கு சம்மந்தமாக என்னை எத்தனை முறை விசாரித்தார்கள் என்றால் போலிசார் மற்றும் போலிஸ் உயர் அதிகாரிகள் ஆகியோர் என்னை சுமார் ஒருவாரம் விசாரித்தார்கள். இவ்வழக்கின் புலன்விசாரணை அதிகாரி என்னை 16.05.2008 அன்று ஒருநாள் தான் விசாரித்தார். புலன்விசாரணை அதிகாரி என்னை எத்தனை மணிக்கு விசாரித்தார் என்றால் நான் காவல்நிலையத்தில் சென்று புகார் கொடுத்தவுடன் தான் புலன்விசாரணை அதிகாரி தான் என்னை சம்பவஇடத்திற்கு அழைத்துவந்தார் என்றும், அவர் என்னை கொலை நடந்த இடங்களுக்கு அழைத்துக்கொண்டு சென்று பார்த்தார் என்றும், நான் தான் இறந்தவர்களின் உடல்களை அவருக்கு அடையாளம் காட்டினேன் என்றும், அன்று இரவு 8.00 மணி வரை அவர் என்னை விசாரித்தார் என்றும், அன்று மாலை 4.30 மணிக்கு என்னிடம் கையொப்பம் பெற்றுகொண்டார் என்றும் சாட்சி பதில் சொல்லுகிறார்.

மாலை 4.30 மணிக்கு என்னிடம் கையொப்பம் பெற்றது தான் புகாரா என்றால் அதனை நான் சரியாக படித்து பார்க்கவில்லை என்றும், நான் சொன்ன அனைத்து சங்கதிகளையும் ஸ்டேட்மெண்டாக எழுதியிருக்கிறேன் என்று புலன்விசாரணை அதிகாரி சொன்னார் என்றும், சாட்சி பதில் சொல்லுகிறார். நான் 4.30 மணிக்கு கையொப்பம் செய்து கொடுத்தது தான் இவ்வழக்கிற்காக பொய்யாக ஜோடனை செய்யப்பட்ட புகார் என்றால் சரியல்ல. நான் காவல்நிலையத்தில் புகார் கொடுத்ததிற்கு பிறகு தான் புலன்விசாரணை அதிகாரி என்னை சம்பவ இடத்திற்கு அழைத்து வந்தார் என்று சாட்சி சுயமாக கூறுகிறார்.

நான் காவல்நிலையத்திற்கு புகார் கொடுப்பதற்கு செல்லவில்லை என்றாலும், நான் புகார் கொடுக்கவில்லை என்றாலும், அன்றைய தினம் காலை 9.00 மணிக்கு புலன்விசாரணை அதிகாரி எங்களது கிராமத்திற்கு வந்துவிட்டார் என்றாலும், அப்போது நான் கிராமத்தில் இல்லை என்றாலும், நான் சிதம்பரம் அண்ணாமலை பல்கலைகழகத்திற்கு போய்யிருந்தேன் என்றாலும் சரியல்ல. என்னிடம் கையொப்பம் பெற்றபோது புலன்விசாரணை அதிகாரி வேறு யார்யாரிடம் கையொப்பம் பெற்றுக்கொண்டார் என்றால் அது பற்றி எனக்கு தெரியாது.

புலன்விசாரணை அதிகாரி அண்ணாமலை பல்கலைகழத்திலிருந்த எனக்கு தகவல் கொடுத்து என்னை வரவழைத்து என் தாயார் முன்பாக புலன்விசாரணை அதிகாரி ஒரு புகார் தயார் செய்து அதில் காலை 9.00 மணி முதல் 10.00 மணிக்குள்ளாக என்னிடம் கையொப்பம் பெற்றுக்கொண்டார் என்றால் சரியல்ல. எனது வீடு சூறையாடப்பட்டதற்கும், எதிரிகளுக்கும் எந்த சம்மந்தமும் கிடையாது என்றால் சரியல்ல.

எங்களது குடும்பம் கிராமத்தில் கள்ளசாராயம் விற்பனை செய்த காரணத்தினால் அதற்கு எதிர்ப்பு தெரிவிக்கும் விதமாக எங்களது கிராம மக்கள் கலவரம் செய்து எங்களது வீட்டை சூறையாடிவிட்டார்கள் என்றாலும், அதற்கும் எதிரிகளுக்கும் சம்மந்தம் கிடையாது என்றாலும் சரியல்ல. மச்சகேந்திரனின் மனைவி பவுனாம்பாள் என்பவர் தேர்தலில் போட்டியிட்டார் என்றால் சரிதான். அந்த தேர்தலில் பவுனாம்பாள் சார்பில் நானும், எதிரி திருஞானமும் கவுண்டிங் ஏஜெண்டுகளாக இருந்தோம் என்றாலும் சரியல்ல. நான் மட்டும் தான் கவுண்டிங்க ஏஜெண்டாக இருந்தேன்.

இந்த வழக்கில் பவுனாம்மாள் ஒரு சாட்சியாக சேர்க்கப்படவில்லை. பவுனாம்பாளின் மற்றொரு பெயர் கைகேயி என்றால் சரியல்ல. பவுனாம்பாளின் சகோதரிதான் கைகேயி என்று சாட்சி சுயமாக சொல்லுகிறார். போலிசார் விசாரணையில் என் தாயாரை யார் மருத்துவமனைக்கு அழைத்து சென்றார்கள் என்று நான் சொல்லியிருக்கிறேன். எத்தனை போலிசார் மருத்துவமனைக்கு உடன் சென்றார்கள் என்று எனக்கு தெரியவில்லை. காவல்ஆய்வாளர் மருத்துவமனைக்கு போகவில்லை. அவர் சம்பவ இடத்தில் விசாரணை செய்துகொண்டிருந்தார்.

காவல் ஆய்வாளர் தான் என் தாயாரை மருத்துவமனைக்கு அனுப்பி வைத்தார் என்றால் அவர் வந்து தான் அனுப்பி வைத்தார். அப்போது பிற்பகல் 12.00 மணி இருக்கும். தேசிங்குபாலனை நான் கொலை செய்தேனா என்றால் இல்லை. தேசிங்கு பாலனை யார் கொலை செய்தார்கள் என்று நான் நேரில் பார்க்கவில்லை என்ற கேள்வியானது எதிரிகள் தரப்பில் கேட்கப்பட்டது. அக்கேள்வி இந்த வழக்கிற்கு சம்மந்தப்பட்டதாக தெரியவில்லை. எனவே அக்கேள்வி நிராகரிக்கப்பட்டது.

தேசிங்குபாலன் இறப்பிற்கு பின்னிட்டு எங்கள் கிராமத்தில் தொடர்ச்சியாக 20 போலிசார் பாதுகாப்பிற்காக பணியமர்த்தப்பட்டார்கள் என்றால் சரியல்ல. இவ்வழக்கு சம்பவத்திற்கு பின்னிட்டு தான் அவ்வாறு பணியமர்த்தப்பட்டார்கள். நான் சம்பவ சமயத்தில் ஊரில் இல்லை என்றாலும், எனவே நான் எந்த சம்பவத்தையும் பார்க்கவில்லை என்றாலும் சரியல்ல. நான் முதல்விசாரணையில் சொன்னது போல் எந்த சம்பவமும் நான் சொன்ன நாள், இடம், நேரத்தில் நடைபெறவில்லை என்றால் சரியல்ல.

இவ்வழக்கு சம்பவத்தில் எதிரிகள் யாரும் சம்மந்தப்படவில்லை என்றாலும், அவர்களுக்கு வழக்கு சம்பவத்துடன் நேரடியாகவோ அல்லது மறைமுகமாகவோ எந்த தொடர்பும் இல்லை என்றாலும் சரியல்ல. அன்றைய தினம் எங்களது கிராமத்தில் காலை 8.00 முதல் 8.30 மணிக்குள்ளாக கலவரம் நடைபெற்றது என்றாலும், அந்த கலவரத்தில் தான் மேற்படி நபர்கள் இறந்துவிட்டார்கள் என்றாலும், அந்த கலவரத்திற்கும், எதிரிகளுக்கும் சம்மந்தம் கிடையாது என்றாலும் சரியல்ல.

அந்த கலவரத்தில் எங்களது கிராமத்தை சேர்ந்த சுமார் 100 பேர் கலந்துகொண்டார்கள் என்றாலும், அன்றைய தினம் எங்களது கிராமத்திலிருந்து சுமார் 100 பேரை போலிசார் காவல்நிலையத்திற்கு அழைத்து சென்றுவிட்டார்கள் என்றாலும் சரியல்ல. எதிரிகள் எனது உறவினர்கள் என்று போலிசார் விசாரணையில் சொல்லியிருக்கிறேன். எனக்கும், தேசிங்குபாலனுக்கும் நிலபிரச்சனை இருந்ததாக போலிசார் விசாரணையில் சொல்லியிருக்கிறேன்.

எதிரிகள் பாரதிதாசன், திருஞானம், காளிதாசன், ரவிசந்திரன், பழனிசாமி, தினேஷ், ஜவகர் பாபு, பாஸ்கரன், சிலம்பரசன், திருவாளப்புத்துார் ரமேஷ், விஜய், சுரேஷ், கனகவள்ளி, சசிகலா ஆகியோர் அடிக்கடி கூடி எங்களது குடும்பத்தை அழிப்பது சம்மந்தமாக பேசினார்கள் என்று நான் போலிசார் விசாரணையில் சொல்லியிருக்கிறேன். எனது தம்பிகள் மகாலிங்கம், அமிர்தலிங்கம் ஆகியோர் அன்றைய தினம் வண்ணாங்குளத்திற்கு குளிக்க சென்றதாக நான் போலிசார் விசாரணையில் சொல்லியிருக்கிறேன்.

சம்பவ தினத்தன்று வண்ணாங்குளத்திற்கு குளிக்க சென்றதாக வழக்கிற்காக பொய்யாக சொல்லுகிறேன் என்றாலும், அன்றைய தினம் ஊர் குழாயில் தண்ணீர் வந்தது என்றாலும், நான் அன்றைய தினம் கல்லூரிக்கு சென்றுவிட்டேன் என்றாலும் சரியல்ல. நாங்கள் அனைவரும் குளித்துவிட்டு திரும்ப வந்துகொண்டிருந்தபோது பால்சாமி மற்றும் சின்னதுரை ஆகியோரது வீடுகளுக்கு இடைபட்ட பகுதியில் எதிரிகள் சசிகலா, ஜவகர்பாபு, தினேஷ், விஜய், ஸ்ரீதர், காளிதாசன், சக்திவேல் மகன் ரமேஷ், பாஸ்கரன், பழனிசாமி, திருஞானம், ரவிசந்திரன் ஆகியோர் நின்றுகொண்டிருந்ததாக நான் போலிசார் விசாரணையில் சொல்லியிருக்கிறேன்.

அமிர்தலிங்கம் பாண்டிசேரியிலுள்ள VS Tex என்ற ஜவுளிகடையில் வேலை செய்து வந்தார் என்றால் சரியல்ல. சம்பவ தினத்தன்று அவரும் கிராமத்தில் இல்லை என்றாலும், அவர் பாண்டிசேரிக்கு வேலைக்கு சென்றுவிட்டார் என்றாலும் சரியல்ல. அமிர்தலிங்கத்திற்கு சம்பவத்தின்போது காயங்கள் எதுவும் ஏற்படவில்லை என்றால் சரிதான். எனக்கும் காயங்கள் எதுவும் ஏற்படவில்லை.

எதிரி திருவாளப்புத்துார் ரமேஷ் தான் வைத்திருந்த பட்டா கத்தியால் எனது தந்தையின் கழுத்து, முதுகு, வயிற்று விலா பகுதி ஆகிய இடங்களில் வெட்டியதில் என் தந்தை குடல் சரிந்து கிழே விழுந்துவிட்டதாக நான் போலிசார் விசாரணையில் சொல்லவில்லை என்றால் சரியல்ல. எதிரிகள் ஜவகர்பாபு, காளிதாசன், சுரேஷ், விஜய், ஸ்ரீதர் ஆகியோர் தர்மலிங்கத்தை சுற்றிவளைத்து அவர் எங்கும் போகமுடியாதபடி மறைத்துவிட்டார்கள் என்று நான் போலிசார் விசாரணையில் சொல்லியிருக்கிறேன்.

எதிரி காளிதாசன் தர்மலிங்கத்தை எட்டி உதைத்தலில் நிலை தடுமாறிய தர்மலிங்கத்தை எதிரி பாஸ்கரன் காலில் வெட்டியதாக போலிசார் விசாரணையில் சொல்லியிருக்கிறேன். எதிரி சக்திவேல் மகன் ரமேஷ் தர்மலிங்கத்தின் தலை முதல் பாதம் வரை உள்ள பல பகுதியில் சரமாறியாக வெட்டினார் என்றும் கீழே விழுந்த தர்மலிங்கத்தின் நெஞ்சில் காளிதாசன் உட்கார்ந்துகொண்டார் என்றும் நான் போலிசார் விசாரணையில் சொல்லியிருக்கிறேன். நான் இவ்வழக்கு சம்பவம் தொடர்பாக சிறார் நீதி குழுமத்தில் சாட்சியம் அளித்திருக்கிறேன் என்றால் சரிதான்.

அந்த சாட்சியத்தில் நான் போலிசார் சம்பவ இடத்திற்கு பகல் 11.30 மணிக்கு வந்ததாக சொல்லியிருக்கிறேன் என்றால் 11.30 மணியிலிருந்து 12.00 மணிக்குள்ளாக வந்ததாக சொல்லியிருப்பேன். நான் தவறாக சொல்லுகிறேன் என்றாலும், 11.30 மணிக்கு போலிசார் சம்பவ இடத்திற்கு வந்ததாகத்தான் நான் சாட்சியம் அளித்திருக்கிறேன் என்றாலும், தற்போது அதற்கு முரணாக சாட்சியம் அளிக்கிறேன் என்றாலும் சரியல்ல.

இறந்துபோனவர்களின் உடல்களை போலிசார் எப்போது எடுத்து சென்றாகள் என்றால் பிற்பகல் 2.00 மணியிலிருந்து மாலை 5.00 மணிக்குள்ளாக வெவ்வேறு காலகட்டங்களில் எடுத்து சென்றார்கள். நான் சிறார் நீதிமன்றத்தில் சாட்சியம் அளித்த போது இளம் சிறார்களும் எதிரிகளும் இரண்டு வீச்சருவாள் 8 பட்டாகத்திகள் ஒரு சூலாயுதம் வைத்திருந்தார்கள் என்றும் அந்த ஆயுதங்களால் அவர்கள் எங்களை தாக்கினார்கள் என்றும் சாட்சியம் அளித்திருக்கிறேன் என்றால் அதுபற்றி எனக்கு நினைவில்லை.

நான் அப்படிதான் சாட்சியம் அளித்திருக்கிறேன் என்றாலும், நினைவில்லை என்று பொய்யாக சொல்லுகிறேன் என்றாலும் சரியல்ல. மேலும் நான் சிறார் நீதிமன்றத்தில் சாட்சியம் அளித்தபோது அங்கு என்னிடம் காட்டப்பட்ட அருவாள், பட்டாகத்தி, சூலாயுதம் சம்பவத்தன்று இளம் சிறார்களும் எதிரிகளும் தாக்க பயன்படுத்திய பொருட்கள் ஆகும் என்று சாட்சியம் அளித்திருக்கிறேன் என்றால் சரிதான். நான் சிறார் நீதிமன்றத்தில் சாட்சியம் அளித்த போது சம்பவத்தன்று இரவு 7.00 மணிக்கு 6, 7 கத்தியை காட்டி விசாரித்தார்கள் என்றும் போலிசார் எந்த இடத்தில் வைத்து கத்தியை காட்டி விசாரித்தார்கள் என்றால் வீட்டில்வைத்து விசாரித்ததாக சொல்லியிருக்கிறேன் என்றால் சரியல்ல. அப்படிதான் நான் சாட்சியம் அளித்திருக்கிறேன் என்றாலும், தற்போது அதற்கு முரணாக சாட்சியம் அளிக்கிறேன் என்றாலும் சரியல்ல. ( வழக்கறிஞர் சிறார் நீதிமன்றத்தில் அளிக்கப்பட்ட சாட்சி வாக்குமூலத்தின் ஒளி நகல் தான் வைத்திருக்கிறார்.)

நான் சிறார் நீதிமன்றத்தில் சாட்சியம் அளித்தபோது முனைவர் பட்டம் பெறுவதற்காக சிதம்பரத்தில் விடுதியில் தங்கியிருந்தேன் என்றால் ஆமாம் என்று பதில்

அளித்திருக்கிறேன் என்றால் தேசிங்குபாலன் கொலை வழக்கிற்கு முன்பாக தங்கியிருந்ததாக சாட்சியம் அளித்திருக்கிறேன்.அப்படி நான் குறிப்பாக சாட்சியம் அளிக்கவில்லை என்றால் சரியல்ல. தேசிங்குபாலன் கொலை வழக்கில் எதிரிகள் தினேஷ், ரவிசந்திரன், பாஸ்கரன், சசிகலா, திருஞானம், ரவிசந்திரன் ஆகியோர் அரசு தரப்பில் சாட்சியம் அளித்தார்கள்.

அவர்கள் எனக்கு எதிராக சாட்சியம் அளித்துள்ள காரணத்தினால் அவர்களுக்கு எதிராக நான் தற்போது பொய்யான சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல. 9 ஆம் எதிரி சசிகலாவை தவிர வேறு எந்த எதிரிகளும் இறந்துபோன தேசிங்குபாலனின் உறவினர்கள் கிடையாது என்றால் சரியல்ல. இந்த வழக்கு சம்மந்தமாக போலிசார் என்னை விசாரணை செய்யவில்லை என்றாலும், போலிசார் ஜோடித்த பொய்யான வழக்கிற்கு ஆதரவாக போலிசார் சொல்லிகொடுத்து பொய் சாட்சி சொல்லுகிறேன் என்றால் சரியல்ல.

**மறுவிசாரணை இல்லை.**

Sd/- G. Sri Rama Jeyam,
III Additional District Judge,
Salem.